# வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை

இணைந்து வழங்குபவர்கள்
பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை
ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்
ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் : | சிவகங்கை | காலம் : | 31/08/2022 | முதல் | 04/09/2022 |
| அறிக்கை எண் : | 069/ 2022 | வெளியீட்டு நாள் : | 30/08/2022 | | |

## சிவகங்கை மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 33° - 36° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 22° - 25° செல்சியஸ் ஆகவும் பதிவானது. மேலும் மழை பெறப்பட்டது.

| கடந்தவார வானிலை (25.08.2022 முதல் 29.08.2022) | | | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு – 04-09-2022- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 25/08 | 26/08 | 27/08 | 28/08 | 29/08 | தேதி | நாள்-1 31/08 | நாள்-2 01/09 | நாள்-3 02/09 | நாள்-4 03/09 | நாள்-5 04/09 |
| 0.0 | 14.2 | 57.3 | 2.2 | 13.1 | மழை (மி.மீ) | 4 | 12 | 5 | 4 | 8 |
| 33 | 36 | 35 | 33 | 35 | அதிக பட்ச வெப்பநிலை (செல்) | 34 | 35 | 33 | 34 | 34 |
| 25 | 24 | 22 | 24 | 24 | குறைந்த பட்ச வெப்பநிலை (செல்) | 26 | 24 | 25 | 25 | 26 |
| 6 | 6 | 6 | 6 | 6 | மேக மூட்டம் (ஆக்டா) | 6 | 7 | 7 | 5 | 6 |
| 62 | 81 | 86 | 77 | 81 | அதிக மற்றும் குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 70 | 75 | 75 | 70 | 70 |
| 70 | 90 | 73 | 51 | 63 | | 60 | 65 | 65 | 60 | 60 |
| 8 | 12 | 9 | 4 | 10 | காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 4 | 4 | 4 | 8 | 8 |
| மேற்கு | தென் கிழக்கு | மேற்கு | தென்மே மேற்கு | தென்மே மேற்கு | **காற்றின் திசை** | **தென் கிழக்கு** | **தென் கிழக்கு** | **தென் மேற்கு** | **தென் மேற்கு** | **தென் மேற்கு** |

## குறுஞ்செய்தி :

மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் அடுத்த 5 நாட்களுக்கு லேசானது முதல் மிதமான மழைக்கு வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலையானது 33°-35° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது 24°-26° செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். மணிக்கு 4 முதல் 8 கி.மீ வேகத்தில், தென்கிழக்கு மற்றும் தென்மேற்கு திசைகளிலிருந்து காற்று வீசக்கூடும்.

கடந்த சில நாட்களாக ஓரளவு மழைப் பொழிவு பெறப்பட்டுள்ளதாலும், அடுத்த சில நாட்களுக்கு மழை எதிர்பார்க்கப்படுவதாலும் விவசாயிகள் உழவு செய்தல் மற்றும் நிலம் தயாரித்தல் வேலைகளுக்கு திட்டமிடலாம். ஏற்கனவே தயார் நிலையில் உள்ள நிலங்களில் விதைப்பு \ நடவு செய்யும் பணிகளை துவங்கலாம். மேலும் விவசாயிகள் துரிதமாக செயல்பட்டு நீர் வரத்து வாய்க்கால்கள், பண்ணைக் குட்டைகள் மற்றும் நீர் நிலைகளை சரி செய்து மழை நீர் சேகரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மருந்து தெளிக்கும் வேலைகளை சிறிது காலத்திற்கு ஒத்தி வைக்கவும்.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**

**முக்கிய பயிர்கள் : உளுந்து,** நெல், கால்நடை

**உளுந்து:**

- உளுந்து பயிரில் இலைவழி நுண்ணூட்டம் தெளிப்பது நல்லபலன் கிடைக்கும்.
- இலை வழி நுண்ணூட்டமாக ஒரு லிட்டர் தண்ணீரில் 40 மில்லிகிராம் என்ஏஏ மற்றும் 100 மில்லிகிராம் சாலிசெலிக் அமிலம் கலந்து,
- பூக்கும் தருணத்தில் ஒருமுறையும் மற்றும் 15 நாட்கள் கழித்து மறுமுறையும் தெளிக்க வேண்டும்.

நெல்:

- நெல் பயிரில் செம்புள்ளி நோய் கட்டுப்படுத்த ஒரு ஏக்கருக்கு 500 மில்லி மெட்டோமினோஸ்ட்ரோபின் மருந்தினை தண்ணீரில் கலந்து தெளிக்கலாம்.

கால்நடை:

- இடி மின்னல் தாக்குதலிலிருந்து இருந்து கால்நடைகளை பாதுகாக்க விவசாயிகள் கால்நடைகளை மழை கருக்கல் வரும் நேரங்களில் மேய்ச்சச்லுக்கு அனுப்பகூடாது.
- மேலும் மந்தையாக மேயும் வெள்ளாடு மற்றும் செம்மறியாடுகளை மின்னல் தாக்கும் வாய்ப்பு உள்ளது.
- கால்நடைகளை முள் கம்பி வேலியில் அல்லது மரங்களின் அருகில் கட்டுவதை தவிர்க்க வேண்டும்.
- மலைப்பாங்கான குன்று மற்றும் மேடு பள்ளமான பகுதிகளில் மின்னல் தாக்கம் அதிகமாக இருக்கும்.